FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ C 8129388

1. District : Thanjavur PS: V1 AC, Thanjavur Year: 2026 FIR No.: 04/2026 Date: 19.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106 BNSS
(ii) Act சட்டம்: The PC Act 1988 (amended in 2018) Sections பிரிவுகள்: 7, 7A, 8 r/w 12 of
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: the PC Act.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 18.06.2026 Date to : —
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 12.00 hrs Time to : 20.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 19.06.2026
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 18.30 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குடவாசல் பட்டாசு மொத்த-
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சரக்கு அலுவலகம், நன்னிலம்,
திருவாரூர் மாவட்டம் வடகிழக்கு
45 கி.மீ
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : தி. சு. செல்வம் (b) Father's/ Husband's Name : சுப்பிரமணியன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 48/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் - வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : (g) Address :
தொழில் தனை வட்டாட்சியர் முகவரி பாபநாசம் தாலுக்கா அலுவலகம் பாபநாசம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. ANBARASAN
Rank: நிலை DSP .....No. எண் .....
VTBe, Thanjavur.

FIR Content in Column Number 12 of the Thanjavur V&AC, Cr.No.04/2026, U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018)–இன் தொடர்ச்சி

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது..

இன்று 19.06.2026ஆம் தேதி 18:30 மணியளவில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவின் காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் நிலையத்தில் இருந்த போது தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணியாற்றும் திரு. க. செல்வம் என்பவர் அளித்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரம் பின் வருமாறு : அனுப்புநர் சு. செல்வம், த/பெ. சுப்ரமணியன், துணை வட்டாட்சியர், பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர். ஐயா, தஞ்சாவூர் மாவட்டம், தென்னூர் கிராமம், கொற்கை–பட்டீஸ்வரம் ரோட்டில் அமைந்துள்ள கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வாகன பதிவு, ஓட்டுனர் உரிமம் மற்றும் புதுப்பித்தல், வாகன தகுதி சான்று ஆகிய பணிகளுக்கு கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அவர்கள் புரோக்கர்கள் மூலமாக வட்டார அலுவலக வளாகத்திற்குள்ளும், வெளியிலும் கையூட்டாக பணம் வசூல் செய்து, அதனை பின்னர் பெற்றுக் கொள்வதாக கிடைக்கப் பெற்ற தகவலை தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் அறிவுரையின்படி, நேற்று 18.06.2026ஆம் தேதி மாவட்ட ஆய்வுக் குழு சார்பாக நானும், திரு. இராஜேஷ்கிருஷ்ணா, துணை வட்டாட்சியர், திருவோணம் வட்டாட்சியர் அலுவலகம் என்பவரும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. அன்பரசன் அவர்கள் மற்றும் போலீசாருடன் 10.00 மணிக்கு புறப்பட்டு 11.15 மணிக்கு கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சென்றடைந்து கண்காணிப்புப் பணி செய்து 12.00 மணிக்கு திடீர் சோதனை செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கையின் விபரம் பின்வருமாறு.

2) மேற்சொன்ன திடீர்சோதனையின் போது மாவட்ட துணை ஆய்வுக்குழு, மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்.

1) திரு.S.செல்வம், த/பெ. சுப்ரமணியன், துணை வட்டாட்சியர், பாபநாசம் தாலுக்கா அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்.

2) திரு.K.R.இராஜேஷ்கிருஷ்ணா, த/பெ. K.இராஜகுமாரன், துணை வட்டாட்சியர், திருவோணம் தாலுக்கா அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்.

3) திரு.இரெ.அன்பரசன், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர்.

4) திருமதி.பெ.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர்.

5) திரு.ம.சரவணன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர்.

3) மேற்படி கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமானது கும்பகோணம், பம்பபடையூர் அஞ்சல், பட்டீஸ்வரம் – கொற்கை சாலையில், தென்னூர் கிராம R.S.No. 322/3–இல் அமைந்துள்ள கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான தரைதளம் மட்டும் கொண்ட RCC கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலகத்தில் CCTV Camera பொருத்தப்பட்டுள்ளது.

4) மேற்படி கும்பகோணம் வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிடமானது தெற்கு திசையை நோக்கி அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தை சுற்றி காம்பௌண்ட் சுவர் கட்டப்பட்டுள்ளது. அதன் நுழைவாயிலில் சுமார் 5 அடி அகலமுள்ள இரும்பிலான கேட்டும், கிழக்கு பக்கத்தில் சுமார் 15 அடி அகலமுள்ள இரும்பிலான கேட்டும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி வட்டாரப் போக்குவரத்து அலுலவக கட்டிடத்தின் வாசலுக்கு முன்புறம் கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்தில் சுமார் 25x30 நீளஅகலமுள்ள Blue Metal Sheet மூலம் இரும்பிலான கூடாரம் (SHED) போடப்பட்டு, பொதுமக்கள் அமர்வதற்கான காத்திருப்போர் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

5) மேற்படி அலுவலகத்திற்கு வாசலுக்கு அடுத்து, சுமார் 20x15 நீளஅகலமுள்ள Reception Hall அமைக்கப்பட்டுள்ளது. அதில் போடப்பட்டிருந்த மரத்திலான டேபிள்சேரில் பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த, கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1), திரு.S.பாபு, த/பெ. சுப்பிரமணியன் என்பவர் வாகன தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்து கொண்டிருந்தார். அவரை சுற்றி சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட நபர்கள் நின்றுகொண்டிந்தார்கள். மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.S.பாபு என்பவரிடம் ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.இரெ.அன்பரசன் மற்றும் ஆய்வுக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

6) மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1), திரு.S.பாபு அவர்களையும், அவர் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த இருக்கையை சோதனை செய்ய, தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ஸிலிருந்து ரூ.1250/- எடுத்து ஆஜர் செய்தார். அது தொடர்பாக விளக்கம் கேட்க, தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அது தொடர்பாக கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலுவலர் தனிநபர் பணம் இருப்புப் பதிவேட்டை பார்வையிட, அதில் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் பாபு என்பவருக்கு நேரெதிரே ரூ.1250/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

7) மேற்படி அலுவலகத்திற்கு வாசலில் முன்பும், Reception Hall மற்றும் மேற்படி வளாகத்திற்கு வெளியிலும் நின்றுகொண்டு. சந்தேகத்திற்கிடமான முறையில் வசூல் செய்து வந்த சந்தேக நபர்கள் மற்றும் புரோக்கர்களை கண்காணித்து கொண்டிருந்த நிலையில் திடீர் சோதனையின்போது வளாகத்திற்குள் அழைத்துவந்து, பின்னர் அனைவரையும் ஒருவர் பின் ஒருவராக சோதனை செய்தும், அவர்களுக்கு சொந்தமான இருச்சக்கர வாகனங்களை சோதனை செய்ததிலிருந்தும் கீழ்கண்ட விபரங்கள்படியான பணம் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர்களது விளக்கங்கள் மகசரில் பதிவு செய்யப்பட்டது.

வ. எண்.	பெயர் மற்றும் முகவரி	கைப்பற்றப்பட்ட பணம்	விளக்கம்
1.	திரு.கி.நாகேந்திரன், வயது 62/2026, த/பெ. கிருஷ்ணமூர்த்தி, சஞ்சய் ஆட்டோ கன்ஸல்டன்சி, 5/9, சக்கரபாணி கிழக்குத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்,	12670	தான், சஞ்சய் ஆட்டோ கன்ஸல்டன்சி வைத்து நடத்தி வருவதாகவும், மேலும் LLR, DLR மற்றும் Test ஆகிய பணிகளும் செய்து வருவதாகவும், மேற்சொன்ன பணிகளுக்காக கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்சொன்ன பணிகளை செய்து முடிக்க கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
2.	திரு.R.சத்தியமூர்த்தி, வயது.60/2026, த/பெ. ராமதாஸ், 31, பாக்கியலெட்சுமி நகர், ஐந்து தலைப்பு வாய்க்கால்,	9280	தான், தம்பி டிரைவிங் ஸ்கூலில் வேலை பார்த்து வருவதாகவும், Fancy Registration Number வாங்குவதற்கும், Name Transfer செய்யவதற்கும் கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், அது தொடரபான கமிஷன் தொகையை கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு

	கும்பகோணம்.		கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
3.	திரு.V.ஈஸ்வர், 56/2026. த/பெ வீரைய்யா, 2/421, தெற்கு தெரு, பட்டீஸ்வரம், கும்பகோணம்.	4400	தான் Fitness Certificate மற்றும் Transfer Order ஆகிய பணிகளுக்கு கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்சொன்ன பணிகளை செய்து முடிக்க கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
4.	A.ராம்குமார் 33/2026, த/பெ. D.அன்பழகன், JKR Agency, எண்.1/114, ஆச்சாள்புரம் அக்ரஹாரம், சூரியனார்கோவில், திருவிடைமருதூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்	16050	தான் வாகனங்களுக்கு Reflective Sticker ஒட்டும் வேலை செய்து வருவதாகவும், அதற்கான கமிஷன் தொகை கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
5.	திரு. து. மதிவாணன், வயது 30/2026, த/பெ. துரைராஜ, எண் 15A, கம்பட்ட விஸ்வநாதர் தெற்கு வீதி, கும்பகோணம் தாலுகா, தஞ்சாவூர்–612001	39000	தான் LLR, DLR மற்றும் Test ஆகிய பணிகளுக்கு கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்சொன்ன பணிகளை செய்து முடிக்க கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
6.	திரு.அருண்குமார். 26/2026, த/பெ. அன்பு, கீழபுதுத்தெரு, திருவாவடுதுறை, கும்பகோணம்.	4100	தான் LLR–1, DLR–1, Fancy Regn Number–2 மற்றும் Test–1 ஆகிய பணிகளுக்கு கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்சொன்ன பணிகளை செய்து முடிக்க கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
7.	S.குருநாதன் 30/2026, த/பெ. S.சத்தியமூர்த்தி Kudanthai Driving School (labour) No.812, குடியானத்தெரு, ஆரியபடைவீடு, சோழன்மாளிகை	18710	தான் LLR–2, DLR–2 மற்றும் Test–1 ஆகிய பணிகளுக்கு கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்சொன்ன பணிகளை செய்து முடிக்க கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற

	அஞ்சல், கும்பகோணம்		அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
8.	திரு. பெ.து. கோகுல்நாத், வயது 43/2026, த/பெ. துளசிராமன், எண் 74/163, ARR ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர்	4400	தான் LLR, DLR மற்றும் Test ஆகிய பணிகளுக்கு கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்சொன்ன பணிகளை செய்து முடிக்க கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
9.	திரு.இளங்கோ, 56/2026, த/பெ. ஜெகநாதன், எண்.6/13, வடக்கு முதலியார் தெரு, கபிஸ்தலம், தஞ்சாவூர்.	2380	தான் LLR-4 மற்றும் Test-3 ஆகிய பணிகளுக்கு கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்சொன்ன பணிகளை செய்து முடிக்க கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
10.	திரு.J.K.ஈஸ்வரன், 25/2026, த/பெ. குபேரபூபதி, 145, போஸீஸ் குவார்ட்டர்ஸ், பழைய பஸ் ஸ்டாண்ட், கும்பகோணம்.	2500	தான் வாகனங்களுக்கு Reflective Sticker ஒட்டும் வேலை செய்து வருவதாகவும், அதற்கான கமிஷன் தொகை கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
11.	திரு.வெற்றிவேல், 40/2026, த/பெ. குமரவேல், 6/17, E.B.காலணி, கும்பகோணம்.	1530	தான் LLR-1 மற்றும் Test-2 ஆகிய பணிகளுக்கு கும்பகோணம் RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்சொன்ன பணிகளை செய்து முடிக்க கும்பகோணம் MV Inspector திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்திலிருந்து கையூட்டுப் பணம் என்ற அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.
கூடுதல் தொகை		**1,15,020**	

8) மேற்படி அலுவலகத்தின் வரவேற்பறைக்கு மேற்கில் சுமார் 10X 15 நீள அகலமுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அவர்களின் அறை காணப்படுகிறது. சோதனையின் போது அந்த அறையில் பணி செய்து கொண்டிருந்த, பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த, திரு.C.N.சுரேஷ்குமார், நேர்முக உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், கும்பகோணம் என்பவரை சோதனை செய்தபோது, தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ஸில் ரூ.890/- எடுத்து ஆஜர் செய்தார். அது தொடர்பாக

விளக்கம் கேட்க, தான் ரூ.1330/– பணம் கொண்டு வந்ததாகவும், அதில் காலை சாப்பாட்டு செலவு போக மீதம் ரூ. 890/– வைத்திருந்ததாக தெரிவித்தார். அது தொடர்பாக கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலுவலர் தனிநபர் பணம் இருப்புப் பதிவேட்டை பார்வையிட, அதில் மேற்படி சுரேஷ்குமார் என்பவருக்கு நேரெதிரே ரூ.1330/–· என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

9) மேற்படி நேர்முக உதவியாளர் அறைக்கு அடுத்து, மேற்கில் சுமார் 15X 15 நீள அகலமுள்ள வட்டார போக்குவரத்து அலுவலரின் அறை பூட்டிய நிலையில் காணப்படுகிறது. மேலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலரைப் பற்றி விசாரிக்க, தற்போது கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் பணியிடம் தற்சமயம் காலியாக உள்ளதாகவும், அந்த பணியிடத்திற்கு தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஜெய்சங்கர் அவர்கள் கூடுதல் பொறுப்பு வகித்து வருவதாகவும் நேர்முக உதவியாளர் திரு.சுரேஷ் அவர்கள் தெரிவித்தார்.

10) மேற்படி அலுவலகத்தின் வரவேற்பறைக்கு கிழக்கில் சுமார் 15 X 15 நீள அகலமுள்ள தபால் (TAPAL SECTION) அறையை சோதனையின் போது அந்த அறையில் பணி செய்து கொண்டிருந்த, பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த, (1) திரு.S.பார்த்திபன், அலுவலக உதவியாளர் மற்றும் (2) திரு.M.சிலம்பரசன், உதவியாளர் ஆகியோர் பணி செய்து கொண்டிருந்தனர். மேற்படி அலுவலர்களை சோதனை செய்ய திரு.பார்த்திபன் என்பவர் ரூ.560/–ம், திரு.சிலம்பரசன் என்பவர் ரூ.620/–ம் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி நபர்களிடம் பணம் குறித்து விளக்கம் கேட்க, தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார்கள். அது தொடர்பாக தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டை பார்வையிட சரியாக இருந்தது. அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணம் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

11) மேற்படி தபால் (TAPAL SECTION) அறைக்கு அடுத்தாற்போல் இருந்த சுமார் 10x 15 நீளஅகலமுள்ள அறையில் பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த, (1) திரு.புரவலன், கண்காணிப்பாளர், (2) திரு.M.ஹரிகிருஷ்ணன், இளநிலை உதவியாளர், மற்றும் (3) திரு.முத்துபாண்டியன், உதவியாளர் ஆகியோர் பணி செய்து கொண்டிருந்தனர். மேற்படி அலுவலர்களை சோதனை செய்ய திரு.புரவலன் என்பவர் ரூ.1250/–ம், திரு.M.ஹரிகிருஷ்ணன் என்பவர் ரூ.500/–ம் மற்றும் திரு.முத்துபாண்டியன் என்பவர் ரூ.750/– எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி நபர்களிடம் பணம் குறித்து விளக்கம் கேட்க, தனது சொந்த செலவிற்காக

கொண்டு வந்ததாக தெரிவித்தார்கள். அது தொடர்பாக தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டை பார்வையிட சரியாக இருந்தது. அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணம் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

12) மேற்படி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சுமார் 30x30 நீள அகலமுள்ள மையப்பகுதி மேற்கூரை இல்லாத திறந்தவெளிப் பகுதியாக அமைக்கப்பட்டதில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளது.

13) மேற்படி அலுவலகத்தின் மையப்பகுதிக்கு மேற்கில் முதலில் சுமார் 10X15 நீள அகலமுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் அறை காணப்படுகிறது. அந்த அறையின் கதவு மூடிய நிலையில் காணப்பட்டது. அந்த அறையை ஆய்வுக்குழு அலுவலர்களின் முன்பு சோதனை செய்ய சந்தேகத்திற்கிடமான வகையில் எந்த பணமோ பொருளோ காணப்படவில்லை.

14) மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு அடுத்து ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகள் மற்றும் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகள் காணப்படுகிறது. அதனை தொடர்ந்து நான்கு பதிவறைகள் காணப்படுகிறது. மேற்படி நான்கு பதிவறைகளை சோதனை செய்ய சந்தேகத்திற்கிடமான பணமோ, பொருளோ காணப்படவில்லை.

15) மேற்படி அலுவலகத்தின் மையப்பகுதிக்கு தென்கிழக்கில் சுமார் 15 X 15 நீள அகலமுள்ள போட்டோ எடுக்கும் அறை காணப்படுகிறது. அந்த அறையில் பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த, BONTON நிறுவனத்தை சேர்ந்த ஒப்பந்த பணியாளர்கள் திரு.K.இரவிச்சந்திரன் மற்றும் திரு.M.சீதாராமன் ஆகியோர் பணி செய்து கொண்டிருந்தனர். மேலும் அந்த அறைக்கு முன்பு போட்டோ எடுப்பதற்காக சுமார் ஐந்து நபர்கள் காத்திருந்தனர். மேற்படி நபர்களிடம் விசாரணை செய்து, அனுப்பி வைக்கப்பட்டனர். மேற்படி BONTON ஒப்பந்த பணியாளர் திரு.K.இரவிச்சந்திரன் என்பவரை சோதனை செய்தபோது, தனது மேல் சட்டைப்பை மற்றும் மணி பர்ஸிலிருந்து ரூ.5190/- எடுத்து ஆஜர் செய்தார். அது தொடர்பாக விளக்கம் கேட்க, தனது சொந்த செலவிற்காக ரூ.900/- கொண்டு வந்ததாகவும், மீதப்பணம் ரூ.4290/- போட்டோ எடுக்க வந்தவர்களிடம் வசூல் செய்து வைத்திருந்த பணம் என்றும் தெரிவித்தார். அவர் தெரிவித்த சொந்தப்பணம் ரூ.900/- தொடர்பாக கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலுவலர் தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டை பார்வையிட, அதில் மேற்படி இரவிச்சந்திரன் என்பவருக்கு நேரெதிரே ரூ.900/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம்

அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் போட்டோ எடுக்க வந்தவர்களிடம் வசூல் செய்து வைத்திருந்த ரூ.4290/- பற்றி விளக்கம் கேட்க, பொதுவாக ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காக வந்த நபர்களிடம் போட்டோ எடுக்கும்போது நகல் வழங்குவதற்காக ரூ.100/- வீதம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. பாபு அவர்கள் சொன்னதன் பேரில் வசூல் செய்து வந்ததாக தெரிவித்தார். அவர் தெரிவித்த விளக்கம் சட்டத்திற்கு புறம்பாக வசூல் செய்து வைத்திருந்த பணம் என்பதால் இருந்ததால் மேற்படி தொகை ரூ.4290/- மேல்நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

16) மேற்படி BONTON ஒப்பந்தப் பணியாளர் திரு.M.சீதாராமன் என்பவரை சோதனை செய்தபோது, தனது சட்டைப்பை மற்றும் மணி பர்ஸிலிருந்து ரூ.1800/- எடுத்து ஆஜர் செய்தார். அது தொடர்பாக விளக்கம் கேட்க, தனது சொந்த செலவிற்காக ரூ.900/- கொண்டு வந்ததாக தெரிவித்தார். அது தொடர்பாக கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலுவலர் தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டை பார்வையிட, அதில் மேற்படி சீதாராமன் என்பவருக்கு நேரெதிரே ரூ.1800/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி சீதாராமன் என்பவர் அமர்ந்திருந்த இருப்பிலான டேபிளை சோதனை செய்தபோது, மேற்படி டேபிளின் வலதுப்பக்க டிராயரிலிருந்து ரூ.8290/- காணப்பட்டது. அந்த பணம் தொடர்பாக விளக்கம் கேட்டபோது, போட்டோ எடுக்க வந்தவர்களிடம் வசூல் செய்து வைத்திருந்த பணம் என்றும், பொதுவாக லைசென்ஸுக்காக போட்டோ எடுக்கும் வரும் நபர்களிடம் நகல் வழங்குவதற்காக ரூ.100/- வீதம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. பாபு அவர்கள் சொன்னதன் பேரில் வசூல் செய்து வந்ததாக தெரிவித்தார். அவர் தெரிவித்த விளக்கம் சட்டத்திற்கு புறம்பாக வசூல் செய்து வைத்திருந்த பணம் என்பதால் இருந்ததால் மேற்படி தொகை ரூ.8290/- மேல்நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

17) மேற்படி அலுவலகத்தின் மையப்பகுதிக்கு கிழக்கில் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகளும், அதனை தொடர்ந்து சுமார் 15 X 15 நீள அகலமுள்ள ஆ-பிரிவு (B-Section) அறை காணப்படுகிறது. அந்த அறையில் பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த, கண்காணிப்பாளர் செல்வி.S.ராதிகா மற்றும் தட்டச்சர் செல்வி.R.சரண்யாதேவி ஆகியோர் பணி செய்து கொண்டிருந்தனர். மேற்படி கண்காணிப்பாளர் செல்வி.S.ராதிகா என்பவரை பெண்காவலர் திருமதி.சிலம்புசெல்வி என்பவர் மூலம் சோதனை செய்தபோது, தனது ஹேண்ட் பேக்கிலிருந்து ரூ.320/- எடுத்து ஆஜர் செய்தார். அது தொடர்பாக விளக்கம்

கேட்க, தனது சொந்த செலவிற்கான கொண்டுவந்ததாக தெரிவித்தார். அது தொடர்பாக கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலுவலர் தனிநபர் பணம் இருப்புப் பதிவேட்டை பார்வையிட, அதில் மேற்படி ராதிகா என்பவருக்கு நேரெதிரே ரூ.320/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அதேபோல் தட்டச்சர் செல்வி.R.சரண்யாதேவி என்பவரை பெண்காவலர் திருமதி.சிலம்புசெல்வி என்பவர் மூலம் சோதனை செய்தபோது, தனது ஹேண்ட் பேக்கிலிருந்து ரூ.400/- எடுத்து ஆஜர் செய்தார். அது தொடர்பாக விளக்கம் கேட்க, தனது சொந்த செலவிற்கான கொண்டுவந்ததாக தெரிவித்தார். அது தொடர்பாக கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலுவலர் தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டை பார்வையிட, அதில் மேற்படி ராதிகா என்பவருக்கு நேரெதிரே ரூ.400/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

18) இந்த திடீர் சோதனையில் கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தில் வெளிபுறப் பகுதிகளை சோதனை செய்தபோது, கட்டிடத்தின் பின்புற வளாகத்தில் ரூ.3,590/- மற்றும் 15,500/- மதிப்பிலான பணம் இரண்டு கத்தைகளாக சுருட்டிய நிலையில் கேட்பாரற்று கிடந்தது. அந்த பணம் ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

19) இந்த திடீர் சோதனையில் இடைதரகர்களிடமிருந்து ரூ.1,15,020/- பணமும், BONTON ஒப்பந்தப் பணியாளர்களிடமிருந்து ரூ.12,580/- பணமும், கேட்பாரற்று கிடந்த கணக்கில் வராத ரூ.19,090/- பணமும் ஆக கூடுதல் ரூ.1,46,690/- கையூட்டுப் பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

20) பின்னர் வட்டாரப் போக்குவரத்து அலுவலக பதிவேடுகள் மற்றும் வாகன பதிவு மற்றும் ஓட்டுனர் உரிமம் தொடர்பாக ஆவணங்கள் பற்றி வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியார் திரு. சுரேஷ்குமார் அவர்களிடம் விபரங்கள் கேட்க, கீழ்கண்ட பதிவேடுகளை ஆஜர் செய்தார்.

(1) கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு

(2) கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக தனிநபர் பணம் இருப்பு பதிவேடு. மொத்தம் பக்கங்கள் 276, அதில் பக்கம் 111 வரை பதிவுகள் உள்ளது.

(3) கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக பணப்பதிவேடு Cash Book Register (19.12.2025).

(4) கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக தற்செயல்விடுப்புப் பதிவேடு.

மேற்சொன்ன ஆவணங்கள் அனைத்தும் விசாரணைக்காக சட்ட விதிமுறைப்படி கைப்பற்றப்பட்டது.

21) இந்த திடீர் சோதனையின்போது கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக வளாகத்தில் இடைதரகர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,46,690/- குறித்து பணியில் இருந்த கும்பகோணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பாபு அவர்களிடம் விளக்கம் கேட்க, வாகன ஓட்டுநர் உரிமம், LLR ஆகியவை தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்து கொண்டிருந்ததால் அலுவலக வளாகத்திலிருந்த இடைத்தரகர்களை நான் கவனிக்கவில்லை, எனக்கு அவர்கள் ஏன் அலுவலகத்திற்குள் வந்தார்கள் என தெரியவில்லை என தெரிவித்தார். இடைத்தரகர்கள் அனைவரும் வசூல் செய்த தொகையை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பாபு அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்றும், அனைத்து பணிகளுக்கும் பணம் வசூல் செய்து கொடுப்பது வழக்கம் என்றும், அவர்களது வாக்குமூலத்தில் தெரிவித்தது தொடர்பாக விளக்கம் கேட்க, இடைத்தரகர்கள் வசூல் செய்து வைத்திருந்த பணம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். இது தொடர்பாக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

22) இந்த திடீர் சோதனை செயல்முறைகள் 18.06.2026ஆம் தேதி 12.00 மணிக்கு தொடங்கப்பட்டு, 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

23) இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ. 1,46,690/-, ஆவணங்கள், வாக்குமூலங்கள், திடீர் ஆய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். இது குறித்து உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். (sd) (சு. செல்வம்), துணை வட்டாட்சியர், பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம். Sir, the above mentioned petition with seized money in the proceedings cum mahazar has been received from Tr. S. Selvam, Deputy Tahsildar, Papanasam Taluk, Thanjavur District, on 19.06.2026, found prima facie for the allegation of the complaint. Since, the matter is intimated to the SP/CR, V&AC, Chennai and obtained permission from the SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Crime Number 04/2026 U/s 106 of

BNSS and 7, 7A, 8 r/w 12 of the PC Act 1988 (as amended in 2018) on 19.06.2026 at 18.30 hrs. (sd) R. Anbarasan, DSP, V&AC, Thanjavur.

Sir, the original FIR along with the Complaint, Surprise Check Proceedings and statements of accused are sent to the Principal District and Sessions Court, Thanjavur, other copies sent to the senior officers and concerned Investigation Officer.

19.06.26

(R.Anbarasan),
Deputy Supdt., of Police,
Vigilance and Anti-Corruption,
Thanjavur.

Details of Accused in Column Number 7 of the Thanjavur V&AC, Cr.No.04/2026, U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of the PC Act 1988 (as amended in 2018).

Accused

1. Tr. S. Babu, age 59/2026, S/o. P.Subramanian, Motor Vehicle Inspector Grade–1, Regional Transport Office, Kumbakonam.
   Residence: No. 31A, Dhowlath Nagar, Cuddalore District– 607 001.

2. Tr. M. Seetharaman, age 47/2026, S/o. Mohandoss Gandhi, BONTON Staff (Contract Worker), Regional Transport Office, Kumbakonam.
   Residence: No. 20, Thendral Nagar, Manakarambai, Ammanpettai, Thiruvaiyaru Taluk, Thanjavur Di strict.

3. Tr. K.Ravichandran, age 47/2026, S/o. Kumaragurubaran, BONTON Staff (Contract Worker), Regional Transport Office, Kumbakonam.
   Residence: No. 40/c, Ram Nagar, Agraharam, Thiyagarajapuram, Narasingampettai (Post), Thiruvidaimaruthur Taluk, Thanjavur District.

4. Tr.D.Mathivanan, age 30/2026, S/o. Durairaj, No. 15A, Kambatta Viswanathar South street, Kumbakonam Taluk, Thanjavur District.

5. Tr.S.Gurunathan, age 30/2026, S/o. S. Sathiyamoorthy, (Kudanthai Driving School Labour), No. 812, Kudiyana Street, Ariyapadai Veedu, Cholan Maligai Post, Kumbakonam.

6. Tr.A.Ramkumar, age 33/2026, S/o.D.Anbazhagan, (JKR Agency), No.1/114, Aachalpuram Agraharam, Suriyanar Kovil, Thiruvidaimaruthur Taluk, Thanjavur District.

7. Tr. K. Nagendran, age 62/2026, S/o. Krishnamoorthy, (Sanjay Auto Consultancy), No. 5/9, Chakkarabani East Street, Kumbakonam, Thanjavur District.

8. Tr. R. Sathiyamoorhty, age 60/2026, S/o. Ramadoss, No.31, VPV Bakiyalakshmi Nagar, Anju thalaipu Vaaikaal, Kumbakonam, Thanjavur District.

9. Tr. V.Eswar, age 56/2026, S/o. Veeraiya, No. 2/421, South Street, Pateeswaram, Kumbakonam, Thanjavur District.

10. Tr. P.T.Gokulnath, age 43/2026, S/o. Thulasiraman, No. 74/163, ARR Road, Kumbakonam, Thanjavur.

11. Tr. A. Arunkumar, age 26/2026, S/o. Anbu, Keela Pudhutheru, Thiruvavaduthurai, Kumbakonam, Thanjavur.

12. Tr. J.K.Eswaran, age 25/2026, S/o. Kubera Boobathi, No. 145, Police Quartres, Old Bus Stand, Kumbakonam, Thanjavur.

13. Tr. J. Elango, age 56/2026, S/o. Jeganathan, No. 6/13, North Muthaliyar Street, Kabisthalam, Thanjavur.

14. Tr. K. Vetrivel, age 40/2026, S/o. Kumaravel, No. 6/17, EB Colony, Kumbakonam, Thanjavur.

(R.Anbarasan),
Deputy Supdt., of Police,
Vigilance and Anti-Corruption,
Thanjavur.